IntSym 2019
9th International Symposium

# PROBLEMS FACED BY FISHERMEN IN FISHING AND SOLUTIONS THROUGH ISLAMIC FINANCE

**A.H. Rifas[61], M.S.F. Zulaiha[62] & I.M. Sahthees[63]**

Correspondence: ahrifas@gmail.com

ABSTRACT

Fishing is a prevalent one in Sri Lanka, has an essential role among earning sectors to economic development not only in Sri Lanka but globally. Generally, Fishing is a primary income source of poor and middle-class people who live in the coastal area around the country. This study is conducted based on mainly among 05 fishing villages in Kuchchaveli DS division that Pulmoddai, Kuchchaveli, Kumpurupity, Irakkakkandy and Nilaveli with the following aims to be reached; to find out the income level, to the problems faced by fishermen recently, and to prefix the solution by Islamic finance. Primary data which were collected from 50 fishermen by interview and observation has been analyzed using descriptive analysis, Microsoft Excel charts, tables also used. Findings of the research are, fishermen in research location have low level income which is not enough to fulfil their needs, because of the fishing boundaries and fishing time have been restricted by the government. Moreover, expenses of the instruments and goods that are used for fishing are high. Alternative and possibilities in Islamic finance are prefixed for challenges faced by the fishing industry.

**Keywords:** income, fishermen, problems, expenses and islamic finance

**ஆய்வுச்சுருக்கம்**

*இலங்கையில் மட்டுமல்லாது பல்வேறு நாடுகளில் வருமானமீட்டும் துறைகளில் மீன்பிடியானது முக்கியமான இடத்தினை வகிக்கின்றது. இலங்கை கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகையால் மீன்பிடியானது பொதுவான தொழில்முயற்சியாகக் காணப்பட்டாலும் குறிப்பாக கரையோர மக்களின் பிரதான தொழிலாகவும் காணப்படுகின்றது. இவ்வாய்வானது புல்மோட்டை, குச்சவெளி, கும்புறுப்பிட்டி, இறக்ககண்டி மற்றும் நிலாவெளி ஆகிய 05 கிராமங்களை மையப்படுத்திய குச்சவெளிப் பிரதேச மீனவர்களின் வருமான மட்டத்தையும், அம்மீனவர்கள் மீன்பிடித்துறையில் அண்மைக்காலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கண்டறிதலையும் நோக்கங்களாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சுமார் 50 மீனவர்களைக் கொண்டு நேர்காணல் மற்றும் அவதானம் மூலம் பெறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகள் விபரணப் பகுப்பாய்வு மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. முடிவுகளாக, ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் அதிகமான மக்கள் மீன்பிடி மூலமாக வருமானத்தைப் பெற்றாலும் அவ்வருமானம் தொடர்ந்தும் போதுமானதாக இல்லை. மேலும், அம்மீனவர்கள் தங்களது தொழிலினை வலுப்படுத்த முயற்சிசெய்யும் அதேவேளை படகுகளுக்கான செலவு அதிகரிப்பு, மீன்பிடிச் சட்டம் மற்றும் மீன்பிடியில் ஈடுபடும் பகுதிகள் வரையறுக்கப்பட்டு முழுநேரமும் மீன்பிடியில் ஈடுபடமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளமை போன்ற பிரச்சினைகளையும் மீனவர்கள் எதிர்கொள்கின்றமையும் கண்டறியப்பட்டுள்ளன. அப்பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய பொருளீட்டலின் ஊடாக சில தீர்வுகளையும் முன்வைப்பதையும் இவ்வாய்வு பிரதானமாகக் கருகின்றது.*

**கலைச் சொற்கள்:** வருமானம், பிரச்சினைகள், செலவு, மீனவர்கள் மற்றும் இஸ்லாமிய நிதியியல்

## அறிமுகம்

மனிதன் தனது அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏதோ ஒரு வகையில் வருமானம் அவசியமாகும். அந்தவகையில் உலகில் காணப்படும் பொருளாதாரத்தை ஈட்டும்

61 Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
62 Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
63 Privelth Global (Pvt) Ltd, Kalmunai.

வழிமுறைகளாக சிறுதொழில், பெருந்தொழில் என வகைப்படுத்தும் அதேவேளை அவை இரண்டும் சார்ந்ததாகவும் காணப்படுகின்றன. அவற்றுள் அரச தொழில், தனியார் தொழில் என பாகுபடுத்தப்பட்டுள்ளதுடன் அவை புதுப்பிக்கப்படக்கூடிய வருமான வழிகளாகவும் காணப்படுகின்றன. மேலும், வர்த்தக, பொருளாதார சந்தை ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாகக் காணப்படும் அதேவேளை, நீர் வளங்களிலிருந்து மேற்கொள்ளப்படும் விவசாயம், மீன்பிடி மூலமாகப் பெறப்படும் வருமானமும் நாட்டின் உள்நாட்டு உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்துவதனை நோக்க முடியும். அந்த வகையில் பொருளாதார ரீதியாக அதிக வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கும் நீர்வளமானது நிலத்திற்கு ஈரலிப்புத்தன்மையளிப்பதோடு, புவியின் அழகினையும் பேணுவதோடு, போக்குவரத்து,பொருளாதாரத் துறைகளுக்கும் மிகவும் உபயோகப்படுகின்றது. புவியின் மேற்பரப்பில் 71 சதவீதமான பகுதி நீர்ப்பரப்பாக காணப்படுவதோடு அவை சமுத்திரங்கள், கடல், ஆறுகள் போன்ற வடிவங்களாகவவும் உள்ளன (குணராசா, 1997).

அதற்கிணங்க மீன்பிடி என்பது கடலிலுள்ள கண்ட மேடைகளையும், சிறந்த இயற்கை வளங்களையும் கொண்டு இயற்கையாக வளர்ச்சியடைந்த மீன்களை மனித முயற்சி கொண்டு அறுவடை செய்வதே மீன்பிடி எனப்படும் (ஜெஸ்ரினா, 2014). வள்ளங்கள், படகுகள், வலைகள் என ஏராளமான உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு பிடிக்கப்படும் இம்மீன்கள் மூலமாகப் பெறப்படும் தனிநபர் வருமானத்தினூடாக நாட்டின் வருமான மட்டம் அதிகரிக்கின்றது. ஆகவே, நீர் வளமானது பொருளாதார நடவடிக்கைகளில் முக்கியமானதொன்றாகவும், மீன்பிடியானது பொருளாதார வளர்ச்சியில் முக்கியகாரணியாகவும் காணப்படுகிறது (குணராசா, 1997). மேலும், இம்மீன்பிடித்துறை மூலமாக அதன் பிரதேச அழகு, சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்தல், வளர்ப்பு மீன்கள் மூலமாக வர்த்தகம நடவடிக்கை, மனித உடலுக்கான ஊட்டச்சத்துக்களை வழங்குதல், உணவு உற்பத்தி என பெரும் பங்குவகிக்கின்றது. இலங்கைத் தீபகற்பத்தில் அதிக மீன்கள் பிடிக்கப்படுவதற்கு சிறந்த உதாரணம் 2016 ஆம் ஆண்டு 85,295 தொன் மீன்வகை உற்பத்தி செய்யப்பட்டதாகும் (SLNRSCIOTC, 2017). இலங்கையின் கரையோரப் பிரதேச மக்களின் பொருளாதாரத்தில் அதிக வருமான ஈட்டித்தரும் தொழிலாக காணப்படும் மீன்பிடியில் கற்றவர்கள், கற்காதவர்கள் என எல்லோராலும் ஈடுபடுகின்றனர்.

ஆய்வுப் பிரதேசமான குச்சவெளி பிரதேசக் கடற்கரையானது, 47 கிலோமீற்றர் நீளமானதாகவும் (கழிமுகங்கள், களப்புகள் நீங்கலாக) பெரிய குளம் கிராம சேவகர் பிரிவிலிருந்து புல்மோட்டை தெற்கு கிராம சேவகர் பிரிவு வரை நீண்டு செல்வதுடன் (NECCDEP, 2009) குச்சவெளி பிரதேசமானது 36304 மக்கள் தொகையினையயும், 24 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டுள்ளது (குச்சவெளி பிரதேச செயலகம், 2017). ஆய்வுப் பிரதேசமானது நிலாவெளி, இறக்கக்கண்டி, கும்புறுப்பிட்டி, குச்சவெளி, புல்மோட்டை ஆகிய 05 கிராமங்களை மையப்படுத்திய குச்சவெளி பிரதேசத்தின் வருமான மூலமே மீன்பிடித் தொழிலாகும். குச்சவெளிப் பிரதேச மக்களின் வருமானம் பிரதானமாக ஆண்களிலேயே தங்கி நிற்பதனால் வருமானத்திற்கு பெரும்பாலும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் கடலில் மீன்பிடிப்பது பெரும் போராட்டமாகவும், வருமானத்தில் நாளுக்குநாள் திருப்தி மட்டம் குறைவாக இருப்பதுடன் அன்றாட வாழ்க்கையினை கழிப்பது பெரும் நெருக்கடியானதாகவும் காணப்படுகின்றமை இவ்வாய்வுக்கு அடிப்படையாக அமைந்தது.

**ஆய்வு வினாக்கள்**

- குச்சவெளிப் பிரதேச மீனவர்களின் வருமானம் எந்த மட்டத்தில் காணப்படுகிறது? அது வாழ்க்கைத்தரத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது?
- மீன்பிடியிலும், மீன்பிடிக்கும் பகுதியிலும் மீனவர்கள் அண்மைக்காலமாக எதிர்நோக்கும் சவால்கள் எவை?

- மீனவர்கள் மீன்பிடித்துறையில் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய பொருளிட்டலினுடான தீர்வுகள் உள்ளனவா?

**ஆய்வின் நோக்கங்கள்**

- குச்சவெளிப் பிரதேச மீனவர்களின் வருமான மட்டம் அன்றாட வாழ்க்கைக்குப் போதுமானதாக உள்ளதா எனக் கண்டறிதல்.
- அப்பிரதேச மீனவர்கள் மீன்பிடித்துறையில் அண்மைக்காலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை கண்டறிதல்.
- அப்பிரதேச மீனவர்கள் மீன்பிடித்துறையில் எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய பொருளிட்டலினூடாக தீர்வினை முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

மீன்பிடியில் உலக மீன்பிடி, இலங்கை மீன்பிடி அதன் பருவகாலம், மீன்பிடி வலயங்கள், உற்பத்தி நுகர்வு போன்றவை முக்கியமானவை. இதன் மூலம் மாணவர்களிடத்திலும், மக்களிடத்திலும் மீன்பிடி பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது (குணராசா, 1997). மேலும், NECCDEP (2009) நிறுவன அறிக்கை திருகோணமலை கரையோர வள முகாமைத்திட்டம் என்ற தலைப்பில் குச்சவெளி பிரதேச வளத்திரட்டில் மீன்பிடி, அதன் வகைகள், எதிர்நோக்கும் சவால்கள் மீன்பிடி, அதன் வகைகள், அதன் வளர்ச்சிப் போக்கு பற்றி தெளிவுபடுத்துகிறது.

சுபியான் மற்றும் றிஸ்வான் (2013) ஆகியோரின் 100 மீனவர்களைக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், மீனவர் சமூகம் எதிர்கொள்ளும் அபிவிருத்திசார் சவால்களை கண்டறிய அம்பாறை மாவட்டத்தின் கல்முனை முஸ்லிம் பிரிவு, கல்முனை தமிழ்ப்பிரிவு, சாய்ந்தமருது, காரைதீவு மற்றும் நிந்தவூர் போன்ற கிராமங்களில் போதிய வருமானம் இன்மை, வறுமை, கல்விசார் சவால்கள், சுகாதார ரீதியான அபிவிருத்திசார் சவால்களை மீனவர் சமூகம் எதிர்நோக்கும் அதேவேளை, இலங்கை பொருளாதாரத்தில் பிரதான பங்கு வகிக்கும் மீன்பிடித்துறை 2013ம் ஆண்டின் மொத்த மீன் உற்பத்தி 55 சதவீதமான வளர்ச்சியில் கடல்மீன் உற்பத்தி 6.9 சதவீதமும், நன்னீர் மீன் உற்பத்தி 03 சதவீதமும் வளர்ச்சிகண்டுள்ளதாக அலீம் (2013) குறிப்பிட்டுள்ளார்.

ஜெஸ்ரினா (2012) மேற்கொண்ட ஆய்வில், ஆய்வுப் பிரதேசமான புடவைக்கட்டிற்குச் நேரடியாகச் சென்று மீன்பிடியில் பயன்படுத்தும் உபகரணவகைகளை விபரிக்கிறார். அவ்வுபகரணங்களை பெற்றுக்கொள்ள கடன் வாங்குவதாகவும், சிலர் சொந்த உபகரணம் வாங்க வசதியில்லாமையினால் முதலாளியின் கீழ் மீன்பிடிப்பதாகவும் கண்டறிந்தார்.

மேலும், சஜாத் (2014) என்பவர் தனது ஆய்வில் மீன்பிடியில் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள மீன்பிடியில் முதலீடு செய்தல், இரவு பகலாக கடலுக்குச் செல்லல் மற்றும் அதிக விலையுள்ள வலைகளை பெற்று மீன்பிடித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகக் கண்டறிந்ததுடன் மதியழகன் (2000), என்பவரால் "Marketing of fish by fisherman in Trincomalee district" திருகோணமலை மாவட்டத்தில் மீன்பிடியாளர்களால் மீன் சந்தைப்படுத்தல், எனும் பெயரில் அமைந்த ஆய்வுக் கட்டுரையில் திருகோணமலை மாவட்டத்தின் மீன்பிடி சந்தையுடன் தொடர்புபட்ட விடயங்கள், பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள் போன்றன பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்**

அளவு மற்றும் பண்பு ரீதியிலான இவ்வாய்வானது ஆய்வாளர் கொத்து மாதிரி (Cluster Sample) யைக் கொண்டு புல்மோட்டை, குச்சவெளி, கும்புறுப்பிட்டி, இறக்கக்ண்டி மற்றும்

நிலாவெளி ஆகிய 05 கிராமங்களிலிருந்து 50 மீனவ குடும்பங்கள் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன.

2018 ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது முதலாம் நிலைத்தரவுகளை மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்களத்திலிருந்து நேரடியாக நேர்காணல் மற்றும் அவதானம் முதலியவற்றினூடாக முதலாம்நிலைத் தரவுகள் பெறப்பட்டன. மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக பிரதேசத்தின் மீனவ சங்கத்தலைவர், பள்ளிவாயல் தலைவர், நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் போன்றோருடனும் விஷேட கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன.

சேகரிக்கப்பட்ட தரவுகள் விபரப்பகுப்பாய்வு (Descriptive) செய்யப்பட்டுள்ளதுடன் அத்துடன் Microsoft Excel மென்பொருளும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கலந்துரையாடலும் பெறுபேறுகளும்**

குறித்த இவ்வாய்வில் ஐந்து கிராமங்களிலிருந்தும் மீன்பிடியில் ஈடுபடுகின்ற 50 மீனவர்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். அவர்களுள் 09 பேர் 26-34 வயதுடையவர்களாகவும், 29 பேர் 35-50 வயதிற்குட்பட்டவர்களாகவும், 12 பேர் 50 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் உள்ளனர். பெரும்பாலானோர் கல்வி கற்காதோராகவும் மிகச்சிலரே கல்வி கற்றவர்களுமாவர்.


மேலும், திருமணமான 26 வயதிற்கு மேற்பட்டோர் தமது மனைவி, குடும்பம், பிள்ளைகளைப் பராமரித்தல், பிள்ளைகளின் கல்வி, அவர்களின் திருமணம், சீதனம், இருப்பிடங்களை அமைத்தல் மற்றும் சுகாதாரம் இன்னும், ஏராளமான தேவைகளுக்காக மீன்பிடியில் ஈடுபடும் அதேவேளை சில திருமணமாகாத இளைஞர்களும் சிறுவர்களும் தங்களது குடும்ப வறுமை, பெற்றோர், வியாதிக்குட்படல், கல்விகற்க வசதிகுறைவு, தந்தையின் பொடுபோக்கு (போதைக்கு அடிமை) தன் சகோதர சகோதரிகளின் கல்வி, திருமணத்திற்கு பணம் தேவை போன்ற காரணங்களுக்காக மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

அதுமட்டுமல்லாது, மீன்பிடியிடங்கள் பருவத்திற்கு பருவம் மாறுவதுடன் வற்றுப்பெருக்கு காலங்களில் மீன்பிடிப்பது கடினமாகக் காணப்படுவதாகவும் அதனால் மீனவர்கள் இடம்பெயரும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. குறிப்பாக குச்சவெளி பிரதேச மக்கள் முல்லைத்தீவு, ஹம்பாந்தோட்டை போன்ற பகுதிகளுக்கு மீன்பிடிக்காக இடம்பெயர்ந்து செல்கின்றனர். *''மீன்பிடிக்கென பருவகாலங்கள் காணப்படுகின்றன, குறிப்பாக வருடத்தில் ஐந்து மாதங்களில் மாத்திரமே மீன்பிடிக்க முடியும் எனவும் மீனவர் சங்கத்தலைவர்கள் கூறுவதுடன் வருடத்தின் ஜுன் - ஒக்டோபர் மாதங்களே மீன்பிடிக்காலமாகும். அதில் ஜுன், ஜுலை மாதங்களில் மீன்பிடி ஓரளவாகவும் ஓகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் உயர் மீன்பிடியும் ஒக்டோபரில் குறைவாக உள்ளது''* (I.M. Saleem & I. Warathan, Personal communication, Sep 03, 2018). எனக் கூறுகின்றனர்.

மேலும், மீன்பிடி குறைவடைவதனால் அவர்களது மாதாந்த வருமானம் ரூபாய் 20,000- 25,000 மான அளவிலேயே காணப்படுவதாகவும் அதனால் அதிகளவில் மீன்பிடிப்பதற்கு நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்களும் மீன்கள் கெட்டுப்போகாமல் பாதுகாக்க குளிரூட்டல் சாதனங்களையும் கொள்வனவுசெய்ய முடியாதுள்ளதாக அறிய முடிகின்றது. மேலும், வடக்கு-கிழக்கு கரையோரப் பாதுகாப்பு வலயம் என அரசாங்கம் பிரகடணப்படுத்தியதால் மீன்பிடிப்பரப்பு குறுகியதாக வரையறுக்கப்பட்டு காணப்படுவது மிகவும் அசௌகரியமாக உள்ளது. அத்தோடு, குறிப்பிட்ட கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு 24 மீற்றர் நீளமான படகுகளே தேவையென கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள் வற்புறுத்தும் அதேவேளை வசதியின்மையினால் அம்மீனவர்களிடத்தில் 09 மீற்றர் நீளமான படகுகளே அதிகம் காணப்படுகின்றது.

*அட்டவணை 3.1- மீனவர்களின் வருமானப் போக்கு*

| MONTHS | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| JUNE | 17000 | 10000 | 10000 |
| JULY | 20000 | 18000 | 5000 |
| AUGUST | 25000 | 25000 | ------ |
| SEPTEMPER | 25000 | 25000 | ------ |
| OCTOBER | 15000 | 10000 | ------ |




மூலம்: நேர்காணல் தரவுகள்

மேற்காட்டப்பட்ட வரைபின் மூலம் மீனவர் சங்கத் தலைவர்கள் ஊடாக சுமார் மூன்று வருடகால வருமானத்தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அது 2016, 2017 ஆண்டு காலப்பகுதிகளில் உயர்வான நிலையில் காணப்பட்டதனால் மீனவர்களின் வாழ்க்கைத்தரம் ஓரளவு சிறப்பாக அமைந்தபோதிலும் அனைத்துத் தேவைகளையும் பூர்த்திசெய்ய முடிவதில்லை. ஆனால், இதற்கு முற்றிலும் மாற்றமாக 2018ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலம் வரை வாழ்க்கைத் தரம் மோசமானதாகவும், பெரும் சவால்கள் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது (F.M. Bathurudeen, Personal communication, Aug 30, 2018).

*அட்டவணை 3.2- மீனவர்களின் செலவு தொடர்பான விபரம்*

| விபரம் | 3000 க்கு கீழ் | 3000-5000 | 5000-7000 | 7000 - 10000 | 4000-5000 | 10000 மேல் |
|---|---|---|---|---|---|---|
| உணவு, உடை | 22% | 18% | 24% | 20% | 9% | 7% |
| கல்வி | 12% | 19% | 21% | 22% | 16% | 10% |
| மருத்துவம் | 30% | 17% | 10% | 20% | 15% | 8% |
| மின்சாரம் | 58% | 24% | 10% | 3% | 2% | 3% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| போக்குவரத்து | 55% | 18% | 22% | 3% | 1% | 1% |
| தொழில் தொடர்பான செலவு (எரிபொருள், திருத்த வேலை) | 02% | 05% | 06% | 10% | 34% | 43% |

மூலம்: நேர்காணல் தரவுகள்

மீன்பிடித்தொழிலில் ஈடுபடுபவர்கள் எதிர்நோக்கும் சவால்களில் செலவுகளும் பிரதானமானதாகும். இவைதான் வாழ்வின் உயர்வு, தாழ்வு என்பவற்றை தீர்மானிப்பவைகளாகவும் கானப்படுகின்றன. உணவு, உடை, கல்வி, மருத்துவம், போக்குவரத்து, மின்சாரம் மற்றும் தொழிலுடனான செலவுகள் போன்றன முக்கியமாக நோக்கத்தக்கன. இதனடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்திலுள்ள மீனவர்கள் தாம் பெறும் வருமானத்திலிருந்து மேற்படி வழிமுறைகளில் செலவுசெய்வதனை அறியக்கிடைத்தது.

மேலும், மீன்பிடியுடன் தொடர்புபட்ட செலவுகளும் அதிகரித்துள்ளன. "*எரிபொருள் மற்றும் இரை என்பவற்றின் விலை அதிகரித்தமை, கடலுக்குச் செல்லும் முழு நேரத்தை பகுதி நேரமாக இறுக்கமான சட்டமாக ஆக்கியமை 2000ம் ஆண்டு பகுதி நேரத்தை அமுல்செய்து 2001-2005 ல் நீக்கப்பட்டு பின் 2007-2008 காலப்பகுதியில் மீண்டும் அமுலாக்கியமை. Sea guard என்னும் மீனவர் பாதுகாப்பாளர்கள் சட்டவிரோதம் எனக்கூறி கடலுக்குச் செல்லும் தங்களை தடுத்து தங்கள் வயிற்றிலடிக்கிறார்கள்*" (S. Jahfar & M.L. Munas, Personal communication, Aug 22, 2018). எனவே, மீனவர்கள் வருமானம் தொடர்பாக சவால்களை எதிர்கொள்வது புலனாகிறது.

மேலும், மீன்பிடிக்கும் நன்னீர் பகுதிகளில் ஹோட்டல்கள், தொழிற்சாலைகள் (ரைகம உப்புத் தொழிற்சாலை) அமைக்கவென குறிப்பிட்ட பகுதிகளை கைப்பற்றியுள்ளமையால் அப்பகுதியில் மீன்பிடிக்க தடைவிதிக்கப்பட்டது. மேலும், "*மீனவர் பாதுகாப்பு என்ற பெயரில் கடலுக்குச் செல்ல தடைவிதிப்பது, மீனவர்களின் வருமானம் அதிகரிக்கும் காலப்பகுதிகளில் புள்ளியல் அறிவித்தல்கொடுத்து கடலுக்குச் செல்வதை தடுப்பது, அதிக வருமானத்தை ஈட்டித்தரும் ஆழ்கடல் மீன்பிடியை தடுக்க முயற்சிசெய்வதும் அதனைத் தடுப்பதும் அம்மீனவர்களை கொலைசெய்வது போன்றதாகும்*" (K. Arulmani & A.M. Siyath, Personal communication, Aug 23, 2018) எனவும் குறிப்பிடுகின்றனர். இதனால் குடும்பவாழ்க்கை, கல்வி நடவடிக்கை என்பவற்றிற்கு பெரும் தடையாக உள்ளது. இந்நிலை தொடர்ந்தால் 2018ம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர், ஒக்டோபர் மாதங்களில் மீன்பிடி மந்தகதியில் தொடரும் என மீனவர்கள் கவலையுடன் எதிர்வு கூறுகின்றனர்.


***மீனவர்கள் எதிர்நோக்கும் மீன்பிடி தொடர்பான பிரச்சினைகள்***

மீனவர்கள் தங்களது பல்வேறான பிரச்சினைகளை முன்வைத்தபோதிலும், அவரவருடைய பிரத்தியேகப் பிர்ச்சினைகளை பின்வரும் அட்டவனை எடுத்துக்காட்டுகின்றது.

| **பிரச்சினைகள்** | **மீடிறன்** | **சதவீதம்** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| வருமானம் குறைவு | 16 | 32% |
| குளிரூட்டல் வசதியின்மை | 04 | 8% |
| குறைந்தளவிலான மீன்பிடிப் பரப்பு | 08 | 16% |
| பகுதிநேரத் தொழில் | 07 | 14% |
| பெற்றோல், இரை விலை அதிகரிப்பு | 04 | 08% |
| சுற்றுலாப் பகுதியாக மாற்றப்பட்டமை | 06 | 12% |
| அதிகாரிகளின் அத்துமீறல் | 05 | 10% |
| | 50 | 100% |

மூலம்: நேர்காணல் தரவுகள்




மேலும், இம்மீனவர்கள் சேமிப்புப் பழக்கத்தைக் கொண்டிருக்காத அதேவேளை மீன்பிடித்துறையில் எதிர்நோக்குகின்ற பொருளாதார பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய பொருளீட்டலின் ஊடாக தீர்வினை இஸ்லாமிய நிதியியலினூடாக பொருளாதாரப்பிரச்சினைகளை இலகுபடுத்துவதற்கான, இஸ்லாமிய நிதியியலின் அடிப்படையில் கர்ழ் அல் ஹஸன், முஷாரகா, வகாலா, முழாரபா மற்றும் இஜாரா போன்ற வியாபார வழிமுறைகளை அம்மீனவர்கள் அறிந்திருக்கவில்லை என்பது அவர்களது பதில்களிலிருந்து புலனாகின்றது.

**முடிவுரை**

மக்கள் வருமானத்தை ஈட்டுவதில் மீன்பிடியும் ஒரு காரணியாகக் காணப்படுகின்றது. இளையோர், பெரியவர்கள் என மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். அதிலும் பின்தங்கிய கிராமங்களில் வாழ்கின்ற மீனவர்கள் பல பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்கின்றனர். அந்தவகையில் குச்சவெளி பிரதேச செயலகத்தின் கீழுள்ள நிலாவெளி, இறக்கக்கண்டி, கும்புறுப்பிட்டி, குச்சவெளி, புல்மோட்டை என்ற இவ்வாய்வுப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தங்களது தொழில் மூலமான வருமானத்தைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறான சிரமங்களை எதிர்கொள்கின்றனர். ஆகஸ்ட் -செப்டம்பர் பருவத்தில் அதிகமான வருமானத்தை பெறக்கூடியதாக உள்ளதால் ஏனைய

பிரதேசங்களுக்கும் இடம்பெயர்ந்து சென்று மீன்பிடியில் ஈடுபடுவதனை அறியலாம். ஜுன்-ஜுலை, டிசம்பர் பருவங்களில் 20000 தொடக்கம் 25000 க்குட்பட்ட குறைவான வருமானத்தையே பெறுவதும் இன்றைய நாட்களில் வாழ்க்கைச் செலவு அதிகமாக உள்ளமையும் அவர்கள் பொருளாதார ரீதியில் பின்னடைந்துள்ளமைக்கு பிரதானமான காரணம் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

இங்குள்ள மீனவர்கள் பல்வேறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். மீன்பிடிக்கப் போதுமான அளவில் படகு இல்லாமை, படகுகளுக்குப் பயன்படுத்தப்படும் மண்ணெண்ணெய், பெற்றோலின் விலையுயர்வு, முழுநேர மீன்பிடிச் சட்டம் இறுக்கப்பட்டு அடிக்கடி மீன்பிடியில் ஈடுபடமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளமை, மீன்பிடியில் ஈடுபடும் பகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளமை போன்ற பிரச்சினைகளால் அம்மீனவர்கள் அவதிப்படுகின்றனர். மேலும், மீன்பிடி, அதன் முக்கியத்துவம், மீனவர்களின் பொருளாதாரத்தில் அதன் தாக்கம், அதற்காக அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான சிறந்த தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இப்பிரதேச மீனவர்கள் சிறந்த எதிர்காலத்தை பெறுவர் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு ஆய்வாளர்கள் இரண்டு பகுதிகளாக வகைப்படுத்தி தீர்வினை வழங்குகின்றார்கள். அத்தீர்வானது மீனவர்கள் மேலதிக வருமானத்தை பெறுகின்ற போது அதனை சேமித்து இலாபமீட்டக்கூடிய வழிமுறையை இஸ்லாமிய பொருளீட்டல் ஊடாக வழிகாட்டுவதுடன், மீனவத்தொழிலை மேற்கொள்வதற்கான மூலதனமில்லாத சந்தர்ப்பத்திலும் அது போதுமான அளவு தொழிலை மேற்கொள்ள சிக்கலாக இருக்கின்ற சந்தர்ப்பத்திலும் இஸ்லாமிய பொருளீட்டலூடாக அதனை எவ்வாறு ஈடுசெய்ய முடியும் என்ற வழிகாட்டலை ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர். இதனை மீனவர்கள் நடைமுறைப்படுத்துவதினூடாக அவர்களுடைய வருமானப் பிரச்சினைகளிலிருந்து மீள முடியுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**பரிந்துரைகள்**

அந்தவகையில் அவர்களின் மேலதிக வருமானம் திட்டமிடப்பட்ட முறையில் இஸ்லாமிய நிதியியல் அடிப்படையில் சேமிப்பு செய்யப்படுமாயின் அவர்கள் குறைவாக வருமானம் பெறக்கூடிய சந்தர்ப்பத்தில் அவர்களுடைய அன்றாட தேவைகளை பூர்த்திசெய்துகொள்வதற்கு சேமிப்பு முறையானது இஸ்லாமிய வங்கிகள் ஊடாகவும் இஸ்லாமிய முதலீட்டு நிறுவனம் ஊடாகவும் முழாரபா (கூட்டுப்பங்கான்மை), முஷாரகா (கூட்டுப்பங்குடமை) என்ற அடிப்படையில் அவர்களிற்கு சேமிப்பை மேற்கொள்ள முடியும். முழாரபா என்பது பாரம்பரிய வங்கிகளில் பயன்படுத்தப்படுகின்ற வட்டியுடனான Saving Account க்கு பதிலீடாக இஸ்லாமிய வங்கிகளில் பயன்படுத்தப்படுகின்றது. இதனூடாக மீனவர்கள் அவர்களுடைய மேலதிக வருமானத்தை முழாரபா அடிப்படையில் சேமிக்கின்ற போது அது மூலதனமாக பயன்படுத்தப்பட்டு குறிப்பிட்ட விகிதாசார அடிப்படையில் அவர்களின் மூலதனத்திற்கு ஹலாலான இலாபத்தைப் பெறமுடியும்..

முஷாரகா எனும் இஸ்லாமிய பொருளீட்டல் முறையானது பலர் ஒன்றுசேர்ந்து குறித்த வீதத்தில் மூலதனத்தை வழங்கி அதன் மூலம் வரக்கூடிய இலாப, நட்டத்தினை அவரவர்களுடைய மூலதன விகிதத்திற்கேற்ப பகிர்வதாகும். மீன்பிடி துறையில் ஈடுபடக்கூடியவர்கள், 24 மீற்றர் படகு மற்றும் இதர பொருட்களையும் கொள்வனவு செய்யமுற்படுகின்ற போது ஏற்படும் பாரியளவான செலவினை முஷாரகா அடிப்படையில் இலாப நட்டத்தை பகிர்ந்துகொள்ள முடியும். அதேநேரத்தில் உறங்குநிலை பங்குதாரர்களாகவும் (Sleeping Partners) இணைந்து மீன்பிடித் துறையினை மேற்கொள்ள முடியும். இதனூடாக மீன்பிடித்தொழில் செய்யக்கூடியவர்களுக்கு மீன்பிடித் தொழிலுக்குரிய கூலியும் இலாபமும் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகின்றது.

முராபஹா முறையானது மீன்பிடியில் ஈடுபடுகின்றவர்களிற்கு தேவையான பொருட்களை இஸ்லாமிய நிதி நிறுவனங்கள் ஊடாக பெறுகின்ற மீனவர்கள் அப்பொருட்களை பயன்படுத்தி உழைத்து வங்கிக்கு குறிப்பிட்ட காலத்துக்கு ஒவ்வொரு தவனையும் பகுதி பகுதியாக செலுத்த முடியும்.

இஜாரா எனும் இஸ்லாமிய பொருளீட்டல் முறையினூடாக மீனவர்களின் முதலீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குகிறது. மீனவர்களுக்குத் தேவையான அத்தியவசிய பொருட்களை பிறரிடமிருந்தோ அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்தோ வாடகை அடிப்படையில் பெற்று, அதற்குரிய வாடகைப் பணத்தை மாத்திரம், அல்லது பகுதி பகுதியாக அதன் உரிமையும் பெறுகின்ற ஒரு சிறந்த சந்தர்ப்பமும் காணப்படுகிறது. இதைப்போன்றே குறைந்து செல்லும் முஷாரகாவும் இயங்குகிறது. அந்தவகையில் இஸ்திஸ்மார் என்ற அடிப்படையில் முதலீடு செய்கின்ற போது அவர்களிற்கு இது பாரம்பரிய வங்கிகளில் பயன்படுத்தப்படுகின்ற Fixed Deposit என்ற முதலீட்டு முறைக்கு பதிலீடாக அமைவதுடன் பாரிய இலாபத்தை குறுகிய ஒரு காலப்பகுதிக்குள் கிடைக்கக்கூடியதாகவும் அமையும்.

**உசாத்துணைகள்**

Abdul-Rahman, Y. (2010). *The Art of Islamic Banking and Finance*: John Wiley & Sons Inc.

Asyraf, W.D. (2007). Banking for the poor: The Role of Islamic Banking in Microfinance Initiatives: Proceeding of the 2nd Islamic Conference 2007, University of Malaysia.

Hewapathirana, H.P.K., & Gunawardane, N.D.P. (2017). Sri Lanka National Report to the Scientific Committee of the Indian Ocean Tuna Commission (SLNRSCIOTC). *Food and Agriculture Organization of the United Nations*, 1-30.

Rafeeka, A., & Rinos, M.H.M. (2015). Problems of Coastal Habitats and Resources: A Case Study of Addalaichenai Coastal Area, conference procceding, South Eastern University Arts Research Session, 2015. South Eastern University of Sri Lanka.

Rafeeka, S.; & Kuraisiya, K. (2017). The current status of the fisheries sector in Ampara district, conference proceeding, Faculty of Arts & Culture, 2017. South Eastern University of Sri Lanka.

Taqi Usmani. (1998). *An Introduction to Islamic finance*: Idarah Ishaath Deeniyyah Pvt. Ltd, New Delhi.

WSBI-World Saving Bank Institute, (2009). *Islamic Banking and Finance Insight on Possibilities for Europe*: ESBI-European Saving Bank Group, WSBI.

றபீக்கா, எஸ். (2012). ஆம்பாறை மாவட்ட கரையோர மீன்பிடிக் கைத்தொழிலும் அதன் நிலையான அபிவிருத்தியும், ஆய்வரங்கு அறிக்கை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், 2012. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

றபீக்கா, எ. எஸ்., & நுபைல். ஏ.எம். (2014). கல்முனை கடற்றொழில் பிரதேசத்தின் கடல் மீன்பிடியும் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஆனந்தன், அ. ச. (Ed.).(2003). *சமுத்திரவியல்.* இலங்கை: உயர் கல்விச்சேவை நிலையம்.

குணராசா, க. (1997). *மானிடப்புவியியல்*: யாழ்ப்பாணம், இலங்கை: சிறிலங்கா பப்ளிகேசன், பப. 129-133.

பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு. (2018). *புள்ளிவிபர கையேடு.* இலங்கை: குச்சவெளி.

NECCDEP. (2009). *கரையோர மூலவள விபரத்திரட்டு.* குச்சவெளி பிரதேச செயலகம், இலங்கை: ADB வெளியீட்டகம். பப 3-57.

சூசை, எஸ். (1994). *இலங்கை வடமேற்கு கரையோர பிரதேசத்தின் புவியியல் காரணிகளுடன் இணைந்த மீன்பிடி முறைகள் பற்றிய ஒப்பீட்டு ஆராய்ச்சி.* யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

நுாளாயினி, நு. (1999). *திருகோணமலை மாவட்டத்தின் மீன்பிடி கடல்வள அபிவிருத்தி.* திருகோணமலை, இலங்கை: கரையோர மூலவளங்கள் திணைக்களம்.

வர்ணகுலசிங்கம், ம. (2014). *கிழக்கிலங்கையில் இடப்பெயர்விற்கு உள்ளாகும் மீனவச் சமூகத்தினது வாழ்வாதார மாற்றங்கள் பனிச்சங்கேனி வாவி மீனவர்கள் பற்றிய சிறப்பாய்வு.* கிழக்கு பல்கலைக்கழகம்.

மதியழகன், எம். (2008). *திருகோணமலை மாவட்டத்தில் மீன்பிடியாளர்களால் மீன் சந்தைப்படுத்தல்.* திருகோணமலை, இலங்கை: திருகோணமலை கரையோரவள திணைக்களம்.

S. Jahfar. (2018, Aug 22). Personal Interview.

K. Arulmani. (2018, Aug 23). Personal Interview.

A.M. Siyath. (2018, Aug 23). Personal Interview.

F.M. Bathurudeen. (2018, Aug 30). Personal Interview.

I.M. Saleem. (2018, Sep 03). Personal Interview.